
ஶ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத்$_3$வரவரமுநயே நம: ஸ்ரீவாநாசலமஹாமுநயே நம:

ஸமர்ப்பணம்

ஸ்ரீ*ஶை*லே*ஶ*த$_3$யாபாத்ரம் தீ$_4$ப$_3$க் த்யாதி$_3$கு$_3$ணார்ணவம் |
யதீந்த்$_3$ரப்ரவணம் வந்தே$_3$ ரம்யஜாமாதரம் முநிம் ||
ரம்யஜாமாத்ருயோகீ$_3$ந்த்ர பாத$_3$ரேகாமயம் ஸத$_3$ா |
தத$_3$ாயத்தாத்மஸத்தாதி$_3$ம் ராமாநுஜமுநிம் ப$_4$ஜே ||

*ஶ்*ரிய: பதியான ஸர்வே*ஶ்*வரனாலே மயர்வறமதிநலம் அருளப்பெற்றவர்கள் ஆழ்வார்களும் ஆசார்யர்களும். அந்த ஆசார்யர்களிலே சரமமாக அவதாரம் பண்ணியவர் மணவாளமாமுநிகள். அவருடைய *ஶி*ஷ்யர்களில் ப்ரதமகணிதராகவும் அவருடைய பாதரேகையாகவும் இருப்பவர் பொன்னடிக்கால் ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி. அந்த வாநமாமலை ஜீயர் ஸ்வாமியை ஆசார்யனாகப் பெற்ற அடியோங்கள் அவருடைய வைபவத்தை ப்ரகா*ஶ*ப்படுத்தும் வகையில் ஒரு சிறு நூலை வெளியிடுகிறோம். அடியோங்கள் தகப்பனாருடைய ஷஷ்டிஅப்தபூர்த்தி வைபவத்தில் இத்தை வெளியிடும் பாக்யம் கிட்டிற்று. வாநமாமலை ஜீயர் ஸ்வாமியைப் பற்றி அவருடைய அஷ்டதிக்கஜங்களில் ஒருவரான ஸ்ரீதொட்டையங்கார் அப்பை என்னும் மஹாசார்யர் மங்களா*ஶ*ாஸனம் என்றும், ப்ரபத்தி என்றும் 28 *ஶ்*லோகங்களை அருளியுள்ளார். அதற்கு, ஸமீபகாலத்தில் எழுந்தருளியிருந்த திருக்கண்ணபுரம் ஸ்ரீ உ.வே. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி வ்யாக்யானம் செய்துள்ளார். அது மிகவும் விபுலமாக இருக்கிறபடியால், அதனைத் தழுவி ஸங்கரஹமாக பொழிப்புரை ஒன்றை தென்திருப்பேரை ஸ்ரீ உ.வே. அரவிந்தலோசனன் ஸ்வாமி எழுதிக்கொடுத்திருக்கிறார். அதனால் வாநமாமலை ஸ்வாமியைப் பற்றிய *ஶ்*லோகங்களையும் அதனுடைய பொழிப்புரையையும் வாநாமாமலை ஸ்ரீமடத்து திருவாராதகராய் இருந்த ஸ்ரீ உ.வே. ஆதிநாதன் ஸ்வாமியினுடைய ஜ்யேஷ்ட குமாரரான அடியோங்கள் தகப்பனார் ஸ்ரீ உ.வே. தோதாத்ரி ஸ்வாமியினுடைய ஷஷ்டிஅப்தபூர்த்தி வைபவத்திலே வெளியிடுகிறோம். தென்திருப்பேரை ஸ்ரீ உ.வே. அரவிந்தலோசனன் ஸ்வாமிக்கு தலையல்லால் கைம்மாறிலோம் என்று தெரிவித்துக்கொள்கிறோம். இதற்கு Proof பார்த்து உதவிபுரிந்த வாநமாமலை வித்வான் ஸ்ரீ உ.வே. N.S. கிருஷ்ணயங்கார் ஸ்வாமிக்கும், மீமாம்ஸா *ஶி*ரோமணி ஸ்ரீ உ.வே. பரதன் ஸ்வாமிக்கும் க்ருதஜ்ஞதையைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்நூலை வாநமாமலை **ஸ்ரீகலியன் இராமாநுஜ ஜீயர்** ஸ்வாமியினுடைய திருவடித்தாமரைகளில் ஸமர்ப்பிக்கிறோம்.

அடியோங்கள்
இராமாநுஜ தாஸர்கள்,
T. ஸாரதி, T. ஸம்பத்

ஸர்வதாரி வருஷம், ஐப்பசி மாதம்,
கார்த்திகை நக்ஷத்திரம் 14.11.2008
திருவல்லிக்கேணி.

Sri :
Srimathe Ramanujaya Nama :

SRI VANAMAMALAI MUTT

NANGUNERI - 627 108.

Srimath Paramahamsa Jagadguru
Sri Kaliyan Vanamamalai Ramanuja Jeer Swami

E.mail : varamangai2001@yahoo.com
Fax : 04635 - 250636
Ph : 04635 - 250159 (Personal)
: 04635 - 250119 (Office)

ஸ்ரீ:

Place : NANGUNERI
Date : 5.11.08

॥ श्रीमते रामानुजाय नमः ॥ श्रीमद्वरवरमुनये नमः ॥ श्रीवानमहाद्रि मुनिभ्यो नमः

அன்புள்ள ஸ்ரீவைஷ்ணவப் பெருமக்களே, அடியேன் எழுத ஸ்ரீவான-
மலை ஸ்ரீமடத்தின் திவ்ய வாக்குத் திரட்டு. இந்த பரம்பரைக்குப் பாத்தி-
ரமாக வாழ்ந்திருக்கும் ஸ்ரீ உ.வே. அனந்த கோவிந்த ஸ்வாமி, ஸ்ரீமடத்து
திருவனந்தபுரம் ஸ்ரீ ஸ்வாமியும் பொன்னடிக்கால் ஸ்ரீ ஸ்வாமியின்
மங்களாசாஸனம் பெற்று ஸம்ப்ரதாயத்துக்கு "பொக்கிஷ" என்ற
பெரும் தொண்டு செய்து வருகின்றனர். உபந்யாஸங்கள்
ஆசார்ய ஸ்வாமி அருளிய ஸம்ப்ரதாயத்தை அந்த ஸ்ரீமடம்
எழுதி வெளியிட்டு வருகிறது. இந்த
ஸம்ப்ரதாயத்துக்கும் பெரும் பங்கு சேர்த்து திருக்கண்ண-
புரம் ஸ்ரீ உ.வே. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியின் முயற்சியால்
பிரசுரிக்கப்படுகிறது. அதற்கு அனுக்ரஹம் செய்த ஸ்ரீ உ.வே. அனந்த
கோவிந்த ஸ்வாமிக்கு இந்த பொக்கிஷம் ஸமர்ப்பணம்.


கன்னட மொழியில் "தொட்ட" என்று சொல்லின் பொருள் "பெரிய" என்பது. எனவே, "தொட்டாசார்யர்" என்று மேல் [illegible] பெரியவரை, இந்த இரு ஸ்தோத்ரங்களையும் இயற்றிய மஹாசார்யனை "மஹாசார்யர்" என்று அழைக்கிறார். இந்த மஹாசார்யர்க்கு உள்ள மிக்க பெருமையுண்டு — அதாவது — ஸ்ரீ பொன்னடிக்கால் ஜீயர் ஸ்வாமியின் "ரம்ய ஜாமாத்ரு யோகீந்த்ர பாதரேகாமயம் ஸதா / ததாயத்தாத்ம ஸத்தாதிம் ராமாநுஜ முநிம் பஜே" என்று ஜகத் ப்ரஸித்தமான தனியன் ஸ்லோகத்தையும் இயற்றிப் பெருமை பெற்றவர் [illegible] [illegible] [illegible] ஆசார்ய பரம்பரை ஸ்ரீ [illegible] [illegible] [illegible] [illegible] இந்த "மஹாசார்யரே". பெரியவர்க்கு "பெரிய" என்று அடைமொழி பல இடங்களிலும் பொருந்தும் என்று தெரிகிறது, இந்தப் பெரியவர், பொன்னடிக்கால் ஜீயரது [illegible] [illegible] விளங்கிய மஹான், "தொட்டயாசார்யர்" என்று [illegible] திருப்பெயர் பெற்று விளங்கினார். இந்த [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] பெற வேண்டும்.

[illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] என்று நாம் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible].

[illegible]

வானமாமலை – [illegible] – 5
29-ஆம் பட்டத்து ஜீயர்
[illegible] [illegible] [illegible]
[illegible].

ஶ்ரீ:



ஸ்ரீ வாநமாமலை ராமாநுஜ ஜீயர்ஸ்வாமி வைபவ ஸங்க்ரஹம்

ஶ்ரிய: பதியாய் பரமகாருணிகனாய் எழுந்தருளியிருக்கும் ஸர்வேஶ்வரன் சேதனோஜ்ஜீவநார்த்தமாய் நரநாராயண ரூபேண அவதரித்து வேதஸாரமான திருமந்திரத்தை உபதேஶித்தும், அவ்வழியால் சேதனர் திருந்தக்காணாமையால் ஸஜாதீயத்தைக்கொண்டு ம்ருகம் பிடிப்பாரைப்போல் திருவனந்தாழ்வானை ''கலௌ ராமாநுஜோ முநி:'' என்கிறபடி இராமாநுஜ முனியாய் அவதரிப்பித்தருளினான்.

இராமாநுஜரென்னும் பாஷ்யகாரரும், பரமதநிரஸன பூர்வகமாக ஸ்வமதஸ்தாபனம் செய்தருளி, பிறகு ''யதீந்த்$_3$ர ப்ரவணாத்மநா'' ''அரவரசப்பெருஞ்சோதி'' இத்யாதிப்படியே அழகியவரமுனியென்னும் மணவாள மாமுனிகளாகத் திருவவதரித்து, ஸ்வமதத்தை எங்கும் பரவும்படி ப்ரவர்த்திப்பித்து, 'ஸ்வர்ணபாத$_3$ஸம்ஜ்ஞிகம், 'பொன்னடிக்கால் ஜீயர்' 'ரம்யஜாமாத்ருயோகீ$_3$ந்த்$_3$ர பாத$_3$ரேக$_2$ாமயம்' இத்யாதிக்கிணங்கத் தம்முடைய பாதரேகாபூதராகிய அழகியவரதமுனி என்னும் வாநமாமலை ராமாநுஜ ஜீயரைக் கொண்டு ஸ்வமதம் எங்கும் பரவி நிலவும்படியாகச் செய்தருளினார்.

ஸ்ரீவாநமாமலை ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி, ''வரமங்கை நகர்'' என்னும் பெயரையுடைய வானமாமலை என்கிற திவ்ய தேஶத்தில் 'செய்தவேள்வியர் வையத்தேவர்' என்று நம்மாழ்வார் அருளிச்செய்தபடி பரம வைதிக குல பய: பாராவாரத்திற்குச் சந்திரன் போல் அழகியவரதன் என்னும் திருநாமத்துடன் ஸ்ரீரங்கராஜ ஸ்வாமிக்குப் புதல்வராய் அவதரித்தருளினார். ப்ராஹ்மண வர்ணத்திற்குரிய சௌளோபநயந ஸம்ஸ்காரங்களை அந்தவந்தக் காலங்களில் செய்யப்பெற்று வேத வேதாந்தங்களையும் செவ்வனே அத்யயநம் செய்து அப்பால் தமது திருத்தகப்பனாராகிய ஸ்ரீரங்கராஜ ஸ்வாமியின் நியமனத்தைப் பெற்றுக்கொண்டு ஆழ்வார்திருநகரியில் எழுந்தருளியிருக்கும் திருவாய்மொழிப்பிள்ளை திருவடிகளை ஆஶ்ரயித்து அடியேனுக்கு பஞ்ச ஸம்ஸ்காரங்களை அநுக்ரஹிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்க, திருவாய்மொழிப்பிள்ளை ஸ்ரீஸ்வாமியை நன்றாகக் கடாக்ஷித்து 'இவர் தர்ஶநப்ரவர்த்தகராவார்' என்று கருதி ஸ்ரீராமாநுஜ அபராவதாரராய் எழுந்தருளியிருக்கும் மணவாள மாமுனிகளின்

திருவடிகளில் ஆஶ்ரயிக்கும்படி நியமித்தருள, ஸ்ரீஸ்வாமியும் திருவாய்மொழிப் பிள்ளையின் நியமனத்தைச் சிரமேற்கொண்டு ஸ்ரீமணவாள மாமுனிகளின் திருவடிகளை ஆஶ்ரயித்து, ‘‘தாப: புண்ட்$_3$ரஸ்ததா$_2$ நாம மந்த்ரோ யாக$_3$ஶ்ச பஞ்சம: | அமீ பரம ஸம்ஸ்காரா: பாரமைகாந்த்யஹேதவ:’’ || என்கிறபடி பஞ்ச ஸம்ஸ்காரங்களைப் பெற்று மாமுநிகளின் க்ருபாகடாக்ஷத்தால் ஸகல மந்த்ரார்த்தங்களையும் உபய வேதாந்தார்த்தங்களையும் நன்கறியப்பெற்று சக்ரவர்த்தித் திருமகனான பெருமாள் விஷயத்தில் இளையபெருமாளைப் போலே ‘‘ப$_3$ால்யாத் ப்ரப்$_4$ருதி ஸுஸ்நிக்$_3$த$_4$:’’ என்கிறபடியே நிரதிஶய பக்தியுக்தராய் ‘‘அஹம் ஸர்வம் கரிஷ்யாமி’’ என்கிறபடியே மணவாளமாமுனிகளின் திருவடிகளில் ஸகலவித கைங்கர்யங்களையும் செய்யா நின்று கொண்டு ‘‘ந ச ஸீதா த்வயா ஹீநா ந சாஹமபி’’ என்கிறபடி மாமுனிகளின் திருவடிகளை க்ஷணகாலமும் விட்டுப் பிரிய க்ஷமரன்றிக்கே ‘‘ரம்யஜாம த்ருயோகீ$_3$ந்த்$_3$ர பாத$_3$ரேகாமயம் ஸத$_3$ா’’ என்கிறபடி மாமுனிகளின் பாதரேகாமயராய் ‘‘தாராத்மஜாதி ஜநிதம் ஸுகமைஹிகம் ய: காராக்$_3$ருஹப்ரப$_4$வ து:க$_2$ஸமம் விசார்ய’’ (பார்யா புத்ராதி ஸம்பந்தத்தாலுண்டாகும் இஹலோக ஸுகத்தை சிறைச்சாலை நிவாஸத்தாலுண்டாகும் துக்கத்தோடொக்கத் திருவுள்ளம்பற்றி) ப்ரஹ்மசர்யாஶ்ரமத்திலிருந்தே (க்ருஹஸ்த வாநப்ரஸ்தாஶ்ரமங்களை அநாதரவு செய்து) உத்தம ஆஶ்ரமமான ஸந்யாஸாஶ்ரமத்தை, மாமுநிகள் ஆஶ்ரமவீகாரத்தை அங்கீகரிப்பதற்கு முன்னமேயே ஸ்வீகரித்து ஸ்ரீமணவாள மாமுனிகளையே மாதா பிதா இத்யாதி ஸகலவித பந்துவாகக் கருதி அவர் திருவடிகளை ஒருமாநொடியும் பிரியாமல் ஸகலவித கைங்கர்யங்களையும் பண்ணா நின்றுகொண்டு ஸ்ரீரங்கமாநகரிலேயே நித்யவாஸம் பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருந்தார்.

அக்காலத்தில் தாஶரதி வம்ஶத்தில் அவதரித்த ஸ்ரீவரதநாராயண குருவர்யரான ஸ்ரீவாதூலாசார்யர் (கோயில்கந்தாடை அண்ணன்) தர்ஶநப்ரவர்த்தகராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமணவாள மாமுநிகளின் அப்ரதிமவைபவத்தை அறிந்து ஸ்ரீவாநமாமலை ராமாநுஜ ஜீயர் ஸ்வாமியைப் புருஷகாரமாகக் கொண்டு மாமுநிகளின் திருவடிகளை ஆஶ்ரயிக்க மாமுநிகளும் ஸ்ரீவரதநாராணயகுரு (கோயில்கந்தாடை அண்ணன்) ஸ்வாமிக்கு தாபாதி பஞ்ச ஸம்ஸ்காரங்களைப் பண்ணியருளினார். அப்பால் மணவாளமாமுனிகள் ஸ்ரீவரதநாராயணகுரு (கோயில்கந்தாடை அண்ணன்) ஸ்வாமியைக் கடாக்ஷித்து அவருக்கு ஸ்ரீவாநமாமலை ராமாநுஜ ஜீயர் ஸ்வாமியைக் காண்பித்து ‘‘இவர் என்னுடைய ப்ராண ஸுஹ்ருத். தாஶரதி வம்ஶத்திலெனக்குண்டான அதிசயங்களெல்லாம் இவர்க்கும் உண்டாகவேணும். அது எனக்கு அதிப்ரீதிகரம்’’ என்று நியமிக்க கோயில்கந்தாடை அண்ணன் ஸ்வாமியும் மாமுநிகளின் திருவுள்ளத்தை

அறிந்து ‘‘தேவரீருக்கு இது திருவுள்ளமாயிருந்தால் முன்னமேயே அடியேனை ஸ்ரீவாநமாமலை ராமாநுஜ ஜீயர் ஸ்வாமியின் திருவடிகளில் ஆஶ்ரயிப்பித்திருக்கலாமே. அவ்வாறு அநுக்ரஹிக்கவில்லையே” என்று விண்ணப்பிக்க “மாமுநிகளும் நமக்குக் கிடைத்த அதிஶயத்தை நாம் எப்படி விடக்கூடும்” என்றருளிச் செய்ய மாமுநிகளின் திருவுள்ளக் கருத்தை அறிந்த கோயில்கந்தாடை அண்ணன் ஸ்வாமியும் தன்னுடைய ஸம்பந்தமுடையவர்களைக் கடைக்கணிக்க அவர்களில் அப்பாச்சியாரண்ணா (திருமஞ்சனம் அப்பாவின் தௌஹித்ரராய் ஆச்சியாரின் புத்ரருமான ஸ்ரீவாதூல வரதார்யர்) எழுந்திருந்து ‘‘அடியேனுக்கு என் நாதன் ஸ்ரீவாநமாமலை ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி திருவடிகளில் ஸமாஶ்ரயணம் பண்ணிக்கொள்ளும்படியாக நியமித்தருள வேணும்’’ என்று ஸவிநயம் ப்ரணாம பூர்வகம் விஜ்ஞாபிக்க மாமுனிகளும் அத்யந்த ஸந்தோஷத்தை அடைந்து ஸ்ரீவாதூலவரதார்ய ஸ்வாமியை ஸமீபத்தில் எழுந்தருளச் செய்து தாம் எழுந்தருளியிருந்த திவ்ய ஸிம்ஹாஸநத்தில் ஸ்ரீவாநமாமலை ராமாநுஜ ஜீயர் ஸ்வாமியை எழுந்தருளச் செய்து தம் கையில் தரித்துக் கொண்டிருந்த திருவாழி திருச்சங்குகளை ஜீயர் கையில் கொடுத்து ‘இவர் விஷயத்தில் க்ருபை செய்ய வேண்டும்’ என்று நியமித்தருள, ஸ்ரீவாநமாமலை ஜீயரும் ஸமாஶ்ரயணம் செய்யத் திருவுள்ளமில்லாதவராய்ச் சிறிது காலம் விளம்பிக்க, மாமுனிகளும் ‘‘இவர்க்கு அவஶ்யம் ஸமாஶ்ரயணம் பண்ண வேண்டும்; இது நமக்கு அத்யந்தம் ப்ரியம்’’ என்று நிர்ப்பந்தமாக நியமித்தருளி ஸ்ரீவாதூலவரதார்யரையும், அவர் தம்பியான தாஶரதிப்ரப்ருதிகளையும் ஸ்ரீவாநமாமலை ராமாநுஜ ஜீயர் திருவடிகளில் ஆஶ்ரயிக்கும்படி பண்ணி தாபாதி பஞ்ச ஸம்ஸ்காரங்களையும் பண்ணி வைத்தார்.

இவ்வாறு ஸ்ரீமணவாள மாமுனிகளின் நிரதிஶய க்ருபைக்குப் பாத்ர பூதராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவாநமாமலை ராமானுஜ ஜீயர் ஸ்வாமி ஸ்ரீமணவாள மாமுனிகளால் ஸ்தாபிக்கப்பட்ட அஷ்டதிக்கஜங்களில் ப்ரதம கணிதராய் எழுந்தருளியிருந்தார்.

ஸ்ரீமணவாள மாமுனிகளுடைய இப்பேர்ப்பட்ட ஶிஷ்ய ஸம்பத் ப்ராப்திக்குக் காரண பூதராய் ப்ரதம ஶிஷ்யதயா பரிகணிதராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவாநமாமலை ராமாநுஜ ஜீயர் ஸ்வாமிக்கு, செம்பொற்கழலடி என்னுமாப்போலே பொன்னடியாம் செங்கமலப்போது என்று அபியுக்தராலருளிச் செய்யப்பட்ட, திருவேங்கடமலையில் பெரிய ஜீயர் ஸ்வாமிக்கு ஸ்வப்நத்தில் தோன்றினபடி ப்ரஸித்தவைபவ ஸ்ப்ருஹணீயமான ஸ்ரீமணவாள மாமுனிகளின் ஸ்வர்ணபாத ஸம்ஜ்ஞையையுடைய திருவடிகள், திருநாமமாக ஆயின.

இவ்வாறு திக்குபெரும் புகழாளரான ஸ்ரீவாநமாமலை ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி மாமுனிகள் நியமனத்தின் பேரில் உத்தர பாரத யாத்திரையை முடித்து, சேற்றுத் தாமரை செந்நெலூடு மலர் சிரீவர மங்கல நகரில் வீற்றிருக்கும் ஸமயம், பாயுநீரரங்கந் தன்னுள் பாம்பணைப் பள்ளிகொண்ட மாயனை மங்களாஶாஸனம் செய்யத் திருவுள்ளமாய், தமது ஞானபுத்ரரான இராமாநுசப்பிள்ளானுடன் புறப்பட்டார். ஸ்ரீவில்லிபுத்தூர், திருமாலிருஞ்சோலைமலை வழியாகத் திருவரங்கம் சேர்ந்தார். அங்கு உத்தமநம்பி, கோயிலண்ணன் முதலானவர்களால் ஸத்கரிக்கப் பெற்று எறும்பிஶூத்தஸத்வம் அண்ணனுடைய பிரார்த்தனைக்கிணங்க, காஞ்சீமாநகரம் எழுந்தருள, அங்கு அப்பாச்சியாரண்ணா முதலானவர்களால் வரவேற்கப்பட்டு, தேவப்பெருமாளை மங்களாஶாஸனம் செய்தருளி, எறும்பிக்கு எழுந்தருளினார். எறும்பியில் ஶூத்தஸத்வம் அண்ணன் முதலானோரையும் சதுர்தஶாசார்யர்களையும் கூடவைத்துக்கொண்டு, ரஹஸ்யக்ரந்தங்களையும், பகவத் விஷயத்தையும் காலக்ஷேபம் தொடங்கி சாத்தியருளி திருவேங்கடத்தப்பனை ஸேவிக்கத் திருவுள்ளமாய்ப் புறப்பட்டார். திருமலையில் திருவேங்கட ஜீயர் ஸ்வாமிகளால் வரவேற்கப்பட்டு திருவேங்கடத்தப்பனை மங்களாஶாஸனம் செய்தருளினார். அங்குள்ள மஹான்களால் ஸத்கரிக்கப் பெற்று, சிலநாள் தங்கியிருந்தார். ஒருநாள் திருவேங்கடத்தப்பனை மங்களாஶாஸனம் செய்து ஸ்ரீவாநமாமலை கைங்கர்யத்துக்காக எழுந்தருளுவதாக விடைபெற்றுக் கொண்டு மடமேற எழுந்தருளினார். அன்று இரவு ஸ்வப்னத்தில் அப்போதலர்ந்த செந்தாமரை மலர் போன்ற திருமுக மண்டலமுடையவளாய், தேஜோரூபியான ஒரு கன்னி ஸ்ரீவாநமாமலை ஜீயர் மடியில் உட்கார்ந்து கொண்டு "என்னையும் உம்முடன் கூட வானமாமலைக்கு அழைத்துப்போம்" என்று வழக்கடித்துக் கொண்டிருக்கையில் ஜீயர் விழித்து 'இதொரு ஸ்வப்னம் இருந்தபடி என்' என்று ஆஶ்சரியப்பட்டுக் கொண்டிருக்கையில், அவ்வாறே திருவேங்கட ஜீயர் முதலானோரின் கனவிலும் நடக்க விடிந்தவாறே ஜீயரிடம் விண்ணப்பித்தனர்.

தேவரீர் புத்ரியான நாச்சியாரை ஸ்ரீவாநமாமலைக்கு எழுந்தருளப் பண்ணிக்கொண்டு போய் தெய்வநாயகனுக்குத் திருக்கல்யாணம் செய்வித்தருளவேணும் என்றும் விண்ணப்பம் செய்தனர்.

ஜீயரும் திருவேங்கடமலையிலிருந்து ஸ்ரீவரமங்கா தேவியை எழுந்தருளப் பண்ணிக் கொண்டு வந்து ஸ்ரீவாநமாமலைப் பெருமாளுக்கும் ஸ்ரீவரமங்கைப் பிராட்டிக்கும் திருக்கல்யாண மஹோத்ஸவத்தைப் பண்ணி வைத்தது, ஜநகராஜன் சக்ரவர்த்தித் திருமகனான பெருமாளுக்கும், ஸீதாப்பிராட்டிக்கும் திருக்கல்யாணத்தைப் பண்ணிவைத்து அப்போதே அயோத்திக்கு அனுப்பி வைத்தாற் போலன்று பின்னை

எவ்வாறெனில்? ஸ்ரீவரமங்காதேவிக்கு புத்ரீ ப$_4$ாவத்துடன் திருக்கல்யாணம் செய்து புத்ரீத்வ ஸம்பந்த ப்ரயுக்தமான உபலாலந வைபவங்களை இற்றைக்கும் நடத்தி வருவதால் ‘‘வாநாசலமுநெஸ்துல்ய: கோ நாம ஜக$_3$தீதலே – யஸ்யாபத்யமஹோ நித்யம் பத்$_3$மா ஸத்$_3$மநி மோத$_3$தே’’ என்று ஸங்கீர்த்யமான ஸ்ரீவாநமாமலை ராமாநுஜ ஜீயர் அப்ரதிம வைபவம் அத்யந்தம் வாசாமகோசரம்.


*ஶி*ஷ்யாசார்ய தநுத்வயமிதி *ஶ்*லோகத்தில் ஸ்ரீமணவாள மாமுனிகள் நாராயணாவதாரமாயும் ஸ்ரீவாநமாமலை ராமாநுஜ ஜீயர் நராவதாரமாயும் நிரூபித்தபடி ப்ரஸித்த வைபவத்தை உடைய ஸ்ரீவாநமாமலை ராமானுஜ ஜீயர் ஆஸேதுஹிமாசல பர்யந்தம் (இருங்கடல் துடங்கி இமவந்தமளவும்) திவ்ய யாத்ரை செய்து ஆங்காங்கு திவ்யதே*ஶ*ங்களில் ஜகதுஜ்ஜீவநார்த்தமாகத் தம்முடைய திருநாமத்தைக் கொண்டு பீடவி*ஶே*ஷங்களை ஸ்தாபித்துத் தம்முடைய அவதார ஸ்தலமாகிய ஸ்ரீவாநமாமலையில் ஸ்ரீவாநமாமலைப் பெருமாளுக்கு நித்யோத்ஸவாதி ஸகல உத்ஸவங்களையும் நடத்திக் கொண்டு எழுந்தருளியிருந்தார்.

*வைராக்$_3$யம் யதி$_3$ வாயு*ஶ*ந்தநுஸு¬தாऽதி$_4$க்ஷேபத$_3$க்ஷம், புரா*
ப$_4$க்திஶ்சேச்ச$_2$ட$_2$வைரிமுக்$_2$யபத$_3$வீப$_3$த்$_3$த$_4$ாநுஸாரா, பரம் ।
*ஜ்ஞாநம் யத்யபி நாத$_3$யாமுநயதிப்ரௌட$_4$ாதி$_3$*ஶை*லீயுதம்*
தஸ்மாத்$_3$ வாநமஹாத்$_3$ரிலக்ஷ்மணமுநே: கோ வா ஜக$_3$த்யாம் ஸம: ॥

(வைராக்யத்தில் வாயுபுத்ரரான திருவடி, *ஶ*ந்தனுபுத்ரனான பீஷ்மர் இவர்களுடைய வைராக்யத்தையும், பக்தியில் பராங்கு*ஶ*ரின் பதவியையும், ஜ்ஞாநத்தில் நாதயாமுந யதிவரர்களின் *ஶை*லியையும் உடைய ஸ்ரீவாநமஹாத்ரி லக்ஷ்மண முநிக்கு உலகத்தில் ஒப்பு எவர்) என்கிறபடி ஒத்தார் மிக்காரையில்லாத ஸ்ரீவாநமாமலை ராமாநுஜ ஜீயர் ஸ்வாமியின் அப்ரதிம வைபவத்தை ப்ரதிதினமும் அநுஸந்திப்பார் இங்குமங்குமெங்கும் எம்பெருமான் திருவருள் பெற்றின்புறுவர்.

பொலிக பொலிக பொலிக.

श्रीः



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமத்$_3$வரவரமுநயே நம:
ஸ்ரீவாநாசலமஹாமுநயே நம:

ஸ்ரீ வாநமாமலை பொன்னடிக்கால் ஜீயர் ஸ்வாமியைப் பற்றிய

மங்களாஶாஸநம்

(ஸ்ரீ வாநாமாமலை ஜீயர் ஸ்வாமியினுடைய அஷ்டதிக்கஜங்களில்
ஒருவரான **ஸ்ரீதொட்டையங்கார் அப்பை**
என்னும் **மஹாசார்யர்** அருளிச்செய்தது)

१. रम्योपयन्तृमुनिवर्यदयानिवासं
    रामानुजं यतिपतिं करुणामृताब्धिम् ।
वन्दे मनोज्ञवरदाह्वयमात्मवन्तम्
    आजन्मसिद्धपरिपूतचरित्रबोधम् ॥

ரம்யோபயந்த்ருமுநிவர்யத$_3$யாநிவாஸம்
ராமாநுஜம் யதிபதிம் கருணாம்ருதாப்$_3$தி$_4$ம் ।
வந்தே$_3$ மநோஜ்ஞவரதா$_3$ஹ்வயமாத்மவந்தம்
ஆஜந்மஸித்$_3$த$_4$பரிபூதசரித்ரபோ$_3$த$_4$ம் ॥

அழகிய மணவாள மாமுநிகளுடைய அருளுக்கு இருப்பிடமானவரும், கருணைக்கு கடல்போல் இருப்பவரும், தூய மனதுடையவரும், பிறந்தது முதலாகவே நல்லொழுக்கத்தையும் ஞானத்தையும் உடையவரும், அழகிய வரதர் என்னும் பெயரை உடையவருமான வாநமாமலை இராமானுஜ ஜீயர் ஸ்வாமியை வணங்குகிறேன்.

२. रम्योपयन्तृमुनिवर्यदयाऽनुभाव –
संसिद्धसद्गुणगणौघमहार्णवाय ।
रामानुजाय मुनये यमिनां वराय
नाथाय मामककुलस्य नमोऽस्तु नित्यम् ।।

ரம்யோபயந்த்ருமுநிவர்யத$_3$யாநுப$_4$ாவ -
ஸம்ஸித்$_3$த$_4$ஸத்$_3$கு$_3$ணக$_3$ணௌக$_4$மஹார்ணவாய ।
ராமாநுஜாய முநயே யமிநாம் வராய
நாத$_2$ாய மாமககுலஸ்ய நமோSஸ்து நித்யம் ॥

அழகிய மணவாள மாமுநிகளுடைய தயையால் பெறப்பட்ட நற்குணக் கூட்டங்களுக்கு கடல்போல் இருப்பவரும், முநிவர்களுக்குத் தலைவரும், எங்கள் குலத்திற்கு நாதருமான இராமாநுஜ ஜீயர் ஸ்வாமிக்கு எப்பொழுதும் வணக்கம் உரித்தாகுக.

३. श्रीरम्यजामातृमुनीन्द्रपादकञ्जातभृङ्गं करुणान्तरङ्गम् ।
रामानुजं नौमि मुनिं मदीयहृच्चन्द्रकान्तोपलपूर्णचन्द्रम् ।।

ஸ்ரீரம்யஜாமாத்ருமுநீந்த்$_3$ரபாத$_3$ -
கஞ்ஜாதப்$_4$ருங்க$_3$ம் கருணாந்தரங்க$_3$ம் ।
ராமாநுஜம் நௌமி முநிம் மதீ$_3$ய -
ஹ்ருச்சந்த்$_3$ரகாந்தோபலபூர்ணசந்த்$_3$ரம் ॥

அழகிய மணவாள மாமுநிகளுடைய திருவடித்தாமரைகளில் வண்டுபோல் இருப்பவரும், கருணை நிறைந்த மனதுடையவரும், அடியேனுடைய மனதாகிற சந்த்ரகாந்தக்கல்லுக்கு முழுமதி போன்றவருமான இராமாநுஜ ஜீயர் ஸ்வாமியை வணங்குகிறேன்.

४. वन्दे वात्सल्यसौशील्यज्ञानादिगुणसागरम् ।
रामानुजमुनिं रम्यजामातृमुनिजीवितम् ।।

வந்தே$_3$ வாத்ஸல்யஸௌஶீல்ய ஜ்ஞாநாதி$_3$கு$_3$ணஸாக$_3$ரம் ।
ராமாநுஜமுநிம் ரம்யஜாமாத்ருமுநிஜீவிதம் ॥

வாத்ஸல்யம், ஶீலம், ஜ்ஞானம் முதலான நற்குணங்களுக்கு கடல் போன்றிருப்பவரும், அழகிய மணவாள மாமுநிகளை தனக்கு ப்ராணனாகக் கொண்டிருப்பவருமான இராமாநுஜ ஜீயர் ஸ்வாமியை ஸேவிக்கிறேன்.

5. वन्दे वानमहाशैलरामानुजमहामुनिम् ।
यदनादरसव्रीडम् अन्तरालाश्रमद्वयम् ।।

வந்தே$_3$ வாநமஹாஶைலராமாநுஜமஹாமுநிம் ।
யத$_3$நாத$_3$ரஸவ்ரீட$_3$ம் அந்தராலாஶ்ரமத்$_3$வயம் ॥

எவருடைய அநாதரத்தால் ப்ரஹ்மசர்ய-ஸந்யாஸாஶ்ரமங்களுக்கு நடுவிலிருக்கும் மற்றைய இரண்டு ஆஶ்ரமங்களும் வெட்கத்தை அடைந்தனவோ, அந்த வாநமாமலை இராமாநுஜ ஜீயர் ஸ்வாமியை ஸேவிக்கிறேன்.

(வாநமாமலை ஜீயர் ஸ்வாமி ப்ரஹ்மசர்ய ஆஶ்ரமத்திலிருந்து நேரே ஸந்யாஸாஶ்ரமத்தை ஸ்வீகாரம் செய்தவர். அதனால் நடுவிலிருக்கும் க்ருஹஸ்த - வாநப்ரஸ்த ஆச்ரமங்கள் வெட்கத்தை அடைந்தனவாம்.)

௬. रम्यजामातृयोगीन्द्रप्रसादप्रथमास्पदम् ।
रामानुजमुनिं वन्दे कामादिदुरितापहम् ।।

ரம்யஜாமாத்ருயோகீ$_3$ந்ரப்ரஸாத$_3$ப்ரத$_2$மாஸ்பத$_3$ம் ।
ராமாநுஜமுநிம் வந்தே$_3$ காமாதி$_3$து$_3$ரிதாபஹம் ॥

அழகிய மணவாள மாமுநிகளுடைய அருளுக்கு முதல் இலக்கானவரும், காமம் முதலிய தோஷங்களைக் களைபவருமான இராமாநுஜ ஜீயர் ஸ்வாமியை ஸேவிக்கிறேன்.

௭. रामानुजमुनिं वन्दे रमणीयगुणाकरम् ।
रागद्वेषविनिर्मुक्तं राजीवदललोचनम् ।।

ராமாநுஜமுநிம் வந்தே$_3$ ரமணீயகு$_3$ணாகரம் ।
ராக$_3$த்$_3$வேஷவிநிர்முக்தம் ராஜீவத$_3$லலோசநம் ॥

நற்குணங்களுக்கு இருப்பிடமானவரும், விருப்பு-வெறுப்பு ஆகியவைகளிலிருந்து விடுபட்டவரும், தாமரை இதழ் போன்ற திருக்கண்களையுடையவருமான இராமாநுஜ ஜீயர் ஸ்வாமியை ஸேவிக்கிறேன்.

௮. उत्पत्तिं पवनात्मजेऽलभत या वैराग्यसंपत्पुरा
शान्ते शान्तनवे निरन्तरमगाद् वृद्धिं समृद्धां ततः ।
सेयं संप्रति यं समेत्य भुवने विद्योतते नैकधा
तं रामानुजयोगिनं गुरुवरं पश्येम शश्वद् वयम् ।।

உத்பத்திம் பவநாத்மஜேSலப4த யா
வைராக்3யஸம்பத் புரா
ஶாந்தே ஶாந்தநவே நிரந்தரமகா3த்3
வ்ருத்3தி4ம் ஸம்ருத்3தா4ம் தத:।
ஸேயம் ஸம்ப்ரதி யம் ஸமேத்ய பு4வநே
வித்3யோததே நைகதா4
தம் ராமாநுஜயோகி3நம் கு3ருவரம்
பஶ்யேம ஶஶ்வத்3 வயம் ॥

வைராக்யமாகிற செல்வமானது வாயுகுமாரனிடத்தில் உற்பத்தியை அடைந்தது. பின்பு அது ஶந்தநுபுத்ரரான பீஷ்மரிடத்தில் நன்கு வளர்ச்சியை அடைந்தது. அது இப்பொழுது இவ்வுலகில் வாநமாமலை இராமாநுஜ ஜீயர் ஸ்வாமியை அடைந்து பலவிதமாக ப்ரகாஶிக்கிறது. அந்த ஜீயர் ஸ்வாமியை நாம் எப்பொழுதும் கண்களால் கண்டு களிப்போம்.

९. व्याख्या यस्य विदग्धसूरिपरिषच्चित्तापहारक्षमा
यद्दैनन्दिनसत्क्रिया यतिवराद्याचारसन्मातृका: ।
तं रामानुजयोगिवर्यममलं ज्ञानादिपूर्णाश्रयं
वन्दे सौम्यवरेशयोगिचरणद्वन्द्वारविन्दाश्रयम् ।।

வ்யாக்2யா யஸ்ய வித3க்த4ஸூரிபரிஷச் -
சித்தாபஹாரக்ஷமா
யத்3தை3நந்தி3நஸத்க்ரியா யதிவராத்3 -
யாசாரஸந்மாத்ருகா:।
தம் ராமாநுஜயோகி3வர்யமமலம்
ஜ்ஞாநாதி3பூர்ணாஶ்ரயம்
வந்தே3 ஸௌம்யவரேஶயோகி3சரண -
த்3வந்த்3வாரவிந்தா3ஶ்ரயம் ॥

யாருடைய வ்யாக்யானமானது வித்வஜ்ஜநங்களின் மனதை கவர்ந்திழுக்கக்கூடியதோ, யாருடைய நித்யாநுஷ்டேயங்களான நற்கிரிசைகள் மற்ற யதிவரர்களுக்கு முன்னுதாரணமாக இருக்கின்றனவோ, அத்தகையரும், குற்றமற்றவரும், ஜ்ஞானம் முதலிய நற்குணங்கள் நிறைந்தவரும், அழகிய மணவாள மாமுநிகளின் திருவடித் தாமரையிணையை ஆஶ்ரயித்தவருமான வாநமாமலை இராமாநுஜ ஜீயர் ஸ்வாமியை ஸேவிக்கிறேன்.

१०. यद्गोष्ठीसविधस्थिताः शकुनास्तत्त्वं परं शाश्वतं
ज्योतिर्वेदरहस्यसारपठितं नारायणः श्रीपतिः ।
किञ्चान्ये चतुराननादिविबुधास्तच्छेषभूता इति
व्याकुर्वन्ति परस्परं यतिवरं रामानुजं तं भजे ॥

யத்$_3$கோஷ்டீஸவித$_4$ஸ்தி$_2$தாஶ்ஶகுநா:
தத்த்வம் பரம் ஶாஶ்வதம்
ஜ்யோதிர்வேத$_3$ரஹஸ்யஸாரபடி$_2$தம்
நாராயண: ஶ்ரீபதி: ।
கிஞ்சாந்யே சதுராநநாதி$_3$விபு$_3$த$_4$ா:
தச்சே$_2$ஷபூதா இதி
வ்யாகுர்வந்தி பரஸ்பரம் யதிவரம்
ராமாநுஜம் தம் ப$_4$ஜே ॥

யாருடைய கோஷ்டியின் அருகில் இருக்கும் பக்ஷிகளானது ''ஶ்ரிய: பதியான நாராயணனே வேதாந்த ப்ரதிபாத்யன், பரம் ஜ்யோதி, பரம் தத்த்வம், எப்பொழுதுமுள்ளவன்'' என்றும், ''மற்ற நான்முகன் தொடக்கமான தேவர்கள் அவனுக்கு ஶேஷபூதர்கள்'' என்றும் ஒன்றொன்கொன்று பேசுகின்றனவோ, அந்த வாநமாமலை இராமாநுஜ ஜீயர் ஸ்வாமியை வணங்குகிறேன்.

११. यत्कारुण्यसुधातरङ्गविलसन्नेत्राञ्चलप्रक्षिता:
ये केचित्त इमेऽर्थपञ्चकविदां मुख्यास्तु सङ्ख्यावताम् ।
श्रीमद्व्योममहाचलस्य महितैः कैङ्कर्यजातैर्ध्रुवैः
भूयानाश्रितकल्पको विजयते रामानुजोऽयं मुनिः ॥

யத்காருண்யஸுத$_4$ாதரங்கவிலஸந் -
நேத்ராஞ்சலப்ரேக்ஷிதா:
யே கேசித்த இமேSர்த்த$_2$பஞ்சகவித$_3$ாம்
முக்$_2$யாஸ்து ஸங்க்$_2$யாவதாம் ।
ஸ்ரீமத்$_3$வ்யோமமஹாசலஸ்ய மஹிதை:
கைங்கர்யஜாதைர்த்$_4$ருவை:
பூ$_4$யாநாஸ்ரிதகல்பகோ விஜயதே
ராமாநுஜோSயம் முநி: ॥

காருண்யமாகிற அம்ருத அலைகள் விளங்காநிற்கும் எவருடைய கடைக்கண் பார்வைக்கு இலக்கானவர்கள் அர்த்தபஞ்சகஜ்ஞானம் பெற்ற வித்வான்களில் தலைவர்களாக ஆவரோ, அத்தகைய ராமாநுஜஜீயர் ஸ்வாமி, ஸிஷ்யர்களுக்கு கல்பகவ்ருக்ஷம் போன்றும், ஸ்ரீவாநமாமலை திவ்ய தேணத்திற்குச் சிறந்த பல கைங்கர்யங்களைச் செய்துகொண்டும் சிறந்து விளங்குகிறார்.

१२. अस्थिस्नायुवसाऽस्रमांसनिचितेऽनित्ये विकारास्पदे
देहेऽस्मिन्ननहम्यहंमतिकरे शब्दादिसेवापरे ।
श्रीमद्वैष्णवमत्परार्यविमुखे मय्यप्यकार्षीद्दयां
यस्तं व्योममहागिरेः परिपणं रामानुजं तं भजे ॥

அஸ்தி2ஸ்நாயுவஸாऽஸ்ரமாம்ஸநிசிதே
ऽநித்யேவிகாராஸ்பதே3
தே3ஹேऽஸ்மிந்நநஹம்யஹம்மதிகரே
ஶப்3தா3தி3ஸேவாபரே ।
ஸ்ரீமத்3வைஷ்ணவமத்பரார்யவிமுகே2
மய்யப்யகார்ஷீத்3த3யாம்
யஸ்தம் வ்யோமமஹாகி3ரே: பரிபணம்
ராமாநுஜம் தம் ப4ஜே ॥

எலும்பு, நரம்பு, கொழுப்பு, உதிரம், சதை ஆகியவற்றின் கூட்டரவானதும், மாறுபாடுடையதும், அழியக்கூடியதுமான இந்த நான் அல்லாத உடம்பில், நான் என்கிற எண்ணத்தை உடையவனும், ஶப்தம் முதலிய இந்த்ரியவிஷயங்களில் ஈடுபட்டிருப்பவனும், தன்னை நோக்கிக்கொண்டுபோரும் ஸ்ரீவைஷ்ணவர்களிடத்திலும் பராங்முகமாக இருப்பவனுமான அடியேனிடத்திலும் எவர் அருள்புரிந்தாரோ, அத்தகைய வாநமாமலை திவ்யக்ஷேத்ரத்திற்கு நிதியான இராமாநுஜ ஜீயர் ஸ்வாமியை ஸேவிக்கிறேன்.

१३. विद्याकेलिगृहं विरक्तिलतिकाविश्रान्तिकल्पद्रुमं
प्रोन्मीलद्गुणदिव्यरत्नपटलीनिक्षेपमञ्जूषिकाम् ।
श्रीमल्लक्ष्मणयोगिवर्यपदवीरक्षैकदीक्षागुरुं
श्रीमद्व्योममहाचले च निरतं रामानुजार्यं श्रये ।।

வித்3யாகேலிக்3ருஹம் விரக்திலதிகா -
விஶ்ராந்திகல்பத்3ருமம்
ப்ரோந்மீலத்3கு3ணதி3வ்யரத்நபடலீ -
நிக்ஷேபமஞ்ஜூஷிகாம் ।

ஸ்ரீமல்லக்ஷ்மணயோகி$_3$வர்யபத$_3$வீ -
ரக்ஷைகதீ$_3$க்ஷாகு$_3$ரும்
ஸ்ரீமத்$_3$வ்யோமமஹாசலே ச நிரதம்
ராமாநுஜார்யம் ஶ்ரயே ॥

வித்யை விளையாடும் இடமாக இருப்பவரும், வைராக்யமாகிற கொடியானது ஓய்வெடுக்கும் கல்பவிருக்ஷம் போன்றும், உயர்ந்த காந்தி பொருந்திய குணங்களாகிற ரத்னங்களை வைக்கும் பெட்டி போன்றும் இருப்பவரும், எம்பெருமானாரால் நியமிக்கப்பட்ட ஆசார்யபீடத்தை நிர்வஹிப்பதில் உறுதிபூண்டிருப்பவரும், ஸ்ரீவாநமாமலை எம்பெருமானிடத்தில் எப்பொழுதும் ஈடுபட்டிருப்பவருமான இராமாநுஜ ஜீயர் ஸ்வாமியை ஆஶ்ரயிக்கிறேன்.

१४. कान्तोपयन्तृमुनिवर्यदयानिवासं
वैराग्यमुख्यमहनीयगुणांबुराशिम् ।
श्रीदेवनायकपदप्रणयप्रवीणं
रामानुजं यतिपतिं प्रणमामि नित्यम् ।।

காந்தோபயந்த்ருமுநிவர்யத$_3$யாநிவாஸம்
வைராக்$_3$யமுக்$_2$யமஹநீயகு$_3$ணாம்பு$_3$ராஶிம் ।
ஸ்ரீதே$_3$வநாயகபத$_3$ப்ரணயப்ரவீணம்
ராமாநுஜம் யதிபதிம் ப்ரணமாமி நித்யம் ॥

அழகிய மணவாள மாமுநிகளின் தயைக்கு இருப்பிடமானவரும், வைராக்யம் முதலிய நற்குணங்களுக்கு கடல்போன்றிருப்பவரும், ஸ்ரீதெய்வநாயகப்பெருமாளுடைய திருவடிகளில் மிகுந்த அன்புடையவருமான இராமாநுஜ ஜீயர் ஸ்வாமியை எப்பொழுதும் வணங்குகிறேன்.

ஶுபமஸ்து.

ஸ்ரீ வாநமாமலை பொன்னடிக்கால் ஜீயர் ஸ்வாமியைப் பற்றிய

ப்ரபத்தி

(ஸ்ரீ வாநாமாமலை ஜீயர் ஸ்வாமியினுடைய அஷ்டதிக்கஜங்களில்
ஒருவரான **ஸ்ரீதொட்டையங்கார் அப்பை**
என்னும் **மஹாசார்யர்** அருளிச்செய்தது)

१. सद्यःप्रबुद्धसरसीरुहतुल्यशोभौ
संपश्यतां नयनयोर्मुदमादधानौ ।
संसारसागरसमुत्तरणप्रवीणौ
वानाद्रियोगिचरणौ शरणं प्रपद्ये ॥

ஸத்ய:ப்ரபு$_3$த்$_3$த$_4$ஸரஸீருஹதுல்யஶோபௌ$_4$
ஸம்பஶ்யதாம் நயநயோர் முத$_3$மாத$_3$த$_4$ாநௌ ।
ஸம்ஸாரஸாக$_3$ரஸமுத்தரணப்ரவீணௌ
வாநாத்$_3$ரியோகி$_3$சரணௌ ஶரணம் ப்ரபத்$_3$யே ॥

அப்போதலர்ந்த செந்தாமரையை ஒத்த அழகு பொருந்தியனவும், காண்போர் கண்களுக்கு ஆனந்தத்தைக் கொடுப்பனவாகவும், ஸம்ஸாரக் கடலைத் தாண்டுவிப்பதில் வல்லமை உடையனவாகவுமிருக்கும் வானமாமலை இராமாநுஜ ஜீயர் ஸ்வாமியின் திருவடிகளை ஶரணமாகப் பற்றுகிறேன்.

२. कान्तोपयन्तृमुनिवर्यदयात्तभूम्नः
कामादिनिग्रहकरस्य गुणांबुराशेः ।
वानाद्रिलक्ष्मणमुनेर्नतलोककल्प –
वृक्षायमाणचरणौ शरणं प्रपद्ये ॥

காந்தோபயந்த்ருமுநிவர்யத$_3$யாத்தபூ$_4$ம்ந:
காமாதி$_3$நிக்$_3$ரஹகரஸ்ய கு$_3$ணாம்பு$_3$ராஶே: ।
வாநாத்$_3$ரிலக்ஷ்மணமுநேர்நதலோககல்ப -
வ்ருக்ஷாயமாணசரணௌ ஶரணம் ப்ரபத்$_3$யே ॥

மணவாள மாமுநிகளுடைய கருணையினால் பெருமை பெற்றவரும், காமம் முதலிய தோஷங்களை அழிக்கக்கூடியவரும், நற்குணங்களுக்கு கடல் போன்றிருப்பவருமான வானமாமலை இராமாநுஜ ஜீயர் ஸ்வாமியினுடைய, அடிபணிந்தார்க்கு கல்பகவ்ருக்ஷம் போலிருக்கும் திருவடிகளை ணரணமாகப் பற்றுகிறேன்.

३. दारात्मजादिजनितं सुखमैहिकं य:
कारागृहप्रभवदु:खसमं विचार्य ।
सौम्योपयन्तृमुनिपादयुगं श्रितस्तद् –
वानाद्रियोगिचरणौ शरणं प्रपद्ये ।।

த$_3$ாராத்மஜாதி$_3$ஜநிதம் ஸுக$_2$மைஹிகம் ய:
காராக்$_3$ருஹப்ரப$_4$வது$_3$:க$_2$ஸமம் விசார்ய ।
ஸௌம்யோபயந்த்ருமுநிபாத$_3$யுக$_3$ம் ஶ்ரிதஸ்தத்$_3$ -
வாநாத்$_3$ரியோகி$_3$சரணௌ ஶரணம் ப்ரபத்$_3$யே ॥

மனைவி, மக்கள் முதலானவர்களாலே உண்டாகும் இவ்வுலக ஸுகத்தை, சிறையிலுண்டாகும் வேதனைக்குச் சமமாக நினைத்து, அழகியமணவாள மாமுநிகளின் திருவடியிணையை ஆஶ்ரயித்த வானமாமலை இராமாநுஜ ஜீயர் ஸ்வாமியின் திருவடிகளை உபாயமாகப் பற்றுகிறேன்.

४. आदौ हनूमति विरक्तिलता प्रसूता
पश्चाद् गुरुप्रवरमेत्य विवृद्धिमाप्ता ।
शाखासहस्ररुचिरा यमुपेत्य तादृग्
वानाद्रियोगिचरणौ शरणं प्रपद्ये ॥

ஆதௌ$_3$ள ஹநூமதி விரக்திலதா ப்ரஸூதா
பஶ்சாத்$_3$ கு$_3$ருப்ரவரமேத்ய விவ்ருத்$_3$தி$_4$மாப்தா ।
ஶாக$_2$ாஸஹஸ்ரருசிரா யமுபேத்ய தாத்$_3$ருக்$_3$-
வாநாத்$_3$ரியோகி$_3$சரணௌ ஶரணம் ப்ரபத்$_3$யே ॥

முதலில் விரக்தியான கொடி ஹநுமானிடத்தில் உண்டானது. பின்னர் ஆசார்ய ஶ்ரேஷ்டரான வாநமாமலை ஜீயரை அடைந்து பணைத்துத் தழைத்து ஆயிரம் கிளைகளாக வளர்ந்து அழகாக விளங்குகிறது. அந்த வாநமாமலை இராமாநுஜ ஜீயர் ஸ்வாமியின் திருவடிகளை கதியாகப் பற்றுகிறேன்.

५. वानाचलस्य वरमण्टपगोपुरादि –
कैङ्कर्यमारचितवान् फणिनाथवद्यः ।
प्रीत्यै वरं वरवरस्य यतीशितुस्तद् –
वानाद्रियोगिचरणौ शरणं प्रपद्ये ॥

வாநாசலஸ்ய வரமண்டபகோ$_3$புராதி$_3$ -
கைங்கர்யமாரசிதவாந் ப$_2$ணிநாத$_2$வத்$_3$ய: ।
ப்ரீத்யை வரம் வரவரஸ்ய யதீஶிதுஶ்தத்$_3$-
வாநாத்$_3$ரியோகி$_3$சரணௌ ஶரணம் ப்ரபத்$_3$யே ॥

யதிஶ்ரேஷ்டரான மணவாள மாமுநிகளின் உகப்புக்காக வாநமாமலை திவ்யதேசணத்திற்கு சிறந்த மண்டப-கோபுராதி கைங்கர்யத்தை ஆதிசேஷனைப்போல் நன்றாகச் செய்தவரான வாநமாமலை ஜீயர் ஸ்வாமியின் திருவடிகளை ப்ராபகமாகப் பற்றுகிறேன்.

६. भाषान्तरेण परिणामवदागमानां
य: श्रीशठारिवचसां श्रवणामृतानाम् ।
अर्थान् उपादिशदुदारतर: सतां तद् –
वानाद्रियोगिचरणौ शरणं प्रपद्ये ।।

ப$_4$ாஷாந்தரேண பரிணாமவத$_3$ாக$_3$மாநாம்
ய: ஶ்ரீஶட$_2$ாரிவசஸாம் ஶ்ரவணாம்ருதாநாம் ।
அர்த்த$_2$ாந் உபாதி$_3$ஶது$_3$தா$_3$ரதர: ஸதாம் தத்$_3$-
வாநாத்$_3$ரியோகி$_3$சரணௌ ஶரணம் ப்ரபத்$_3$யே ॥

செவிக்கினிய அமுதமாய், தமிழ்மொழியில் வேதத்தின் அர்த்தத்தை வெளியிட்ட நம்மாழ்வாருடைய திருவாய்மொழியின் அர்த்தங்களை, நல்லோர்க்கு வண்மையோடு உபதேஶித்தவரான வானமாமலை ஜீயர் ஸ்வாமியின் திருவடிகளை ஶரணமாகப் பற்றுகிறேன்.

७. यन्नामकीर्तनमनुक्षणमाहूरार्या:
संसारभोगिविषनिर्हरणाय मन्त्रम् ।
पुंसां परेण पुरुषेण च साम्यदं तद् –
वानाद्रियोगिचरणौ शरणं प्रपद्ये ।।

யந்நாமகீர்த்தநமநுக்ஷணமாஹூரார்யா:
ஸம்ஸாரபே$_4$ாகி$_3$விஷநிர்ஹரணாய மந்த்ரம் ।
பும்ஸாம் பரேண புருஷேண ச ஸாம்யத$_3$ம் தத்$_3$-
வாநாத்$_3$ரியோகி$_3$சரணௌ ஶரணம் ப்ரபத்$_3$யே ॥

யாருடைய திருநாமஸங்கீர்த்தனமானது, ஸம்ஸாரமாகிற பாம்பினுடைய விஷத்தைப் போக்கும் மந்த்ரமோ, ஜீவாத்மாக்களுக்கு பரமபுருஷனான எம்பெருமானோடு ஸாம்யத்தை அளிக்கவல்லதோ, அந்த வானமாமலை ஜீயர் ஸ்வாமியினுடைய திருவடிகளை ஶரணமாகப் பற்றுகிறேன்.

८. पुंसां पुरातनभवार्जितपापराशि:
स्मृत्या ययो: सकृदपि प्रलयं प्रयाति ।
सद्वन्दितौ परमपावनतैकवेषौ
वानाद्रियोगिचरणौ शरणं प्रपद्ये ।।

பும்ஸாம் புராதநப$_4$வார்ஜிதபாபராஶி:
ஸ்ம்ருத்யா யயோ: ஸக்ருத$_3$பி ப்ரலயம் ப்ரயாதி ।
ஸத்$_3$வந்தி$_3$தௌ பரமபாவநதைகவேஷௌ
வாநாத்$_3$ரியோகி$_3$சரணௌ ஶரணம் ப்ரபத்$_3$யே ॥

எவைகளை நினைத்தமாத்ரத்திலேயே, ஜீவாத்மாக்களுடைய அநாதிகால ஸம்ஸாரத்தால் உண்டான பாபக்குவியலானது அழிவை அடையுமோ அத்தகையவைகளும், ஸாதுக்களாலே வணங்கப்படுபவைகளும், பரமபாவநத்வத்தையே ஸ்வரூபமாக உடையவைகளுமான வாநமாமாலை ஜீயர் ஸ்வாமியின் திருவடிகளை உபாயமாகப் பற்றுகிறேன்.

९. यत्तीर्थवारि कलिकालसमीरणोत्थ –
तापत्रयाग्निशमनं विमलं जनानाम् ।
यद्रेणुरान्तररज:प्रशमाय चैतद् –
वानाद्रियोगिचरणौ शरणं प्रपद्ये ।।

யத்தீர்த்த$_2$வாரி கலிகாலஸமீரணோத்த$_2$ -
தாபத்ரயாக்$_3$நிஶமநம் விமலம் ஜநாநாம் ।
யத்$_3$ரேணுராந்தரரஜ: ப்ரஶமாய சைதத்$_3$ -
வாநாத்$_3$ரியோகி$_3$சரணௌ ஶரணம் ப்ரபத்$_3$யே ॥

புனிதமான எந்த ஸ்ரீபாததீர்த்தமானது, ஜநங்களுடைய கலிகாலமாகிற வாயுவினாலே கிளர்ந்த தாபத்ரயமாகிற நெருப்பை அணைக்கவல்லதோ, எந்த ஸ்ரீபாததூளியானது,

மனதின் அழுக்குகளைப் போக்கடிக்கவல்லதோ, அத்தகைய வாநமாமலை ஜீயர் ஸ்வாமியின் திருவடிகளை உபாயமாகப் பற்றுகிறேன்.

१०. वाधूलवंशतिलको वरदार्यवर्यो
वात्सल्यसिन्धुरखिलात्मगुणोपपन्नः ।
निक्षिप्तवान् निजभरं सकलं ययोस्तद् –
वानाद्रियोगिचरणौ शरणं प्रपद्ये ।।

வாதூ$_4$லவம்ஶதிலகோ வரத$_3$ார்யவர்யோ
வாத்ஸல்யஸிந்து$_4$ரகி$_2$லாத்மகு$_3$ணோபபந்ந: ।
நிக்ஷிப்தவாந் நிஜப$_4$ரம் ஸகலம் யயோஸ்தத்$_3$-
வாநாத்$_3$ரியோகி$_3$சரணௌ ஶரணம் ப்ரபத்$_3$யே ॥

வாதூல குலதிலகராய், வரதார்யன் என்ற திருநாமத்தை உடையராய், வாத்ஸல்யம் முதலான குணங்களுக்கு கடல்போன்றிருப்பவராய், அனைத்து ஆத்மகுணங்களோடு கூடியிருப்பவரான அப்பாச்சியாரண்ணா, எந்த திருவடிகளில், தன்னை ரக்ஷிக்கும் பரத்தை ஸமர்ப்பித்தாரோ, அந்த வாநமாமாலை ஜீயர் ஸ்வாமினுடைய திருவடிகளை உபாயமாகப் பற்றுகிறேன்.

११. सद्वृत्तसंभवभुवा शमदान्तिसीम्ना
सद्वन्दितेन निगमाञ्चलसारभूम्ना ।
संपूजितौ समरपुङ्गवदेशिकेन
वानाद्रियोगिचरणौ शरणं प्रपद्ये ।।

ஸத்$_3$வ்ருத்தஸம்ப$_4$வபு$_4$வா ஶமதா$_3$ந்திஸீம்நா
ஸத்$_3$வந்தி$_3$தேந நிக$_3$மாஞ்சலஸாரபூ$_4$ம்நா ।
ஸம்பூஜிதௌ ஸமரபுங்க$_3$வதே$_3$ஶிகேந
வாநாத்$_3$ரியோகி$_3$சரணௌ ஶரணம் ப்ரபத்$_3$யே ॥

நல்லொழுக்கங்களுக்குப் பிறப்பிடமாய், ணமதமாதி நற்குணங்களுக்கு எல்லைநிலமாய், நல்லோர்களால் வணங்கப்படுபவராய், வேதாந்த ஸாரத்தை அறிந்ததனால் பெருமைபடைத்தவரான போரேற்று நாயனாராலே, நன்கு பூஜிக்கப்பட்டவைகளான வாநமாமலை ஜீயர் ஸ்வாமியினுடைய திருவடிகளை ணரணமாகப் பற்றுகிறேன்.

(இந்த போரேற்றுநாயனார் ஒன்றான வாநமாமலை ஜீயர் ஸ்வாமியினுடைய அஷ்டதிக் கஜங்களிலே ஒருவராவார்.)

१२. वैराग्यं यदि वायुशन्तनुसुताधिक्षेपदक्षं, पुरा
भक्तिश्चेच्छठवैरिमुख्यपदवीबद्धानुसारा, परम् ।
ज्ञानं यद्यपि नाथयामुनयतिप्रौढादिशैलीयुतं
तस्माद् वानमहाद्रिलक्ष्मणमुनेः को वा जगत्यां समः ।।

வைராக்$_3$யம் யதி$_3$ வாயுஶந்தநுஸுதா -
ऽதி$_4$க்ஷேபத$_3$க்ஷம், புரா
ப$_4$க்திஶ்சேச்ச$_2$ட$_2$வைரிமுக்$_2$ய பத$_3$வீ -
ப$_3$த்$_3$தா$_4$நுஸாரா, பரம் ।
ஜ்ஞாநம் யத்யபி நாத$_3$யாமுநயதி -
ப்ரௌடா$_4$தி$_3$ஶைலீயுதம்
தஸ்மாத்$_3$ வாநமஹாத்$_3$ரிலக்ஷ்மணமுநே:
கோ வா ஜக$_3$த்யாம் ஸம: ॥

வாநமாமலை ஜீயர் ஸ்வாமியிடத்திலுள்ள வைராக்யமானது வாயுபுத்ரனான ஹநூமாந், பீஷ்மர் இவர்களுடையதை

விஞ்சியதாய் உள்ளது. இவரிடமிருக்கும் பக்தி ஶடகோபர் தொடக்கமான ஓராண்வழி ஸம்ப்ரதாயத்தை அநுஸரித்தாகவிருக்கிறது. இவர், யதிஶ்ரேஷ்டரான நாதமுநி, யாமுநமுநி ஆகியவர்களின் ஜ்ஞானத்திற்கு ஒத்ததான உயர்ந்த ஜ்ஞானத்தை உடையவர். ஆகையால் இத்தகைய வாநமாமலை ஜீயர் ஸ்வாமிக்கு ஸமமாக இந்த ஜகத்தில் எவர் உளர்? ஒருவருமில்லை என்றபடி.

१३. कैङ्कर्यं यदि वानशैलकमलाकान्तस्य शेषक्रमात्
प्रीतिश्चेत् कुलशेखरस्य भजने तद्भक्तपूजाविधौ ।
आचायाङ्घ्रिसरोरुहार्चनविधौ यद्युज्ज्वलाः प्रक्रियाः
तास्ता मञ्जुकवेर्गुणैकसदनं वानाद्रियोगीश्वरः ।।

கைங்கர்யம் யதி$_3$ வாநஶைலகமலா -
காந்தஸ்ய ஶேஷக்ரமாத்
ப்ரீதிஶ்சேத் குலஶேக$_2$ரஸ்ய ப$_4$ஜநே
தத்$_3$ப$_4$க்தபூஜாவிதெ$_4$ள ।
ஆசார்யாங்ரிஸரோருஹார்ச்சநவிதெ$_4$ள
யுத்$_3$யுஜ்ஜ்வலா: ப்ரக்ரியா:
தாஸ்தா மஞ்ஜுகவேர்கு$_3$ணைகஸத$_3$நம்
வாநாத்$_3$ரியோகீ$_3$ஶ்வர: ॥

ஆதிஶேஷனைப்போலே, வாநமாமலை ஶ்ரீதெய்வநாயகப் பெருமாளுக்கு கைங்கர்யம் செய்பவராகவும், அவ்வெம்பெருமானின் அடியார்களைப் பூஜிப்பதில் குலஶேகர ஆழ்வாரைப்போலே ப்ரீதியை உடையவராகவும், தன் ஆசார்யருடைய திருவடித்தாமரைகளை அர்ச்சிப்பதில் மதுரகவி ஆழ்வாரைப்போலே சிறந்து விளங்குபவராகவும், நற்குணங்களுக்கு ஒரே இருப்பிடமாகவும் வாநாமாமலை இராமநுஜ ஜீயர் ஸ்வாமி எழுந்தருளியிருக்கிறார்.

१४. शिष्याचर्यातनुद्वयीं निरभजत्प्रायेण लक्ष्मीपतिः
ह्येकोऽभून्नरसंज्ञकस्तदपरो नारायणाख्यः पुरा ।
अद्य त्वेकतरः कृपामृतनिधिः सौम्योपयन्ता मुनिः
तच्छिष्याग्रसरोऽपरो विजयते रामानुजाख्यो मुनिः ।।


ஶிஷ்யாசார்யதநுத்$_3$வயீம் நிரப$_4$ஜத்
ப்ராயேண லக்ஷ்மீபதி:
ஹ்யேகோऽபூ$_4$ந் நரஸம்ஜ்ஞகஸ்தத$_3$பரோ
நாராயணாக்$_2$ய: புரா ।
அத்$_3$ய த்வேகதர: க்ருபாம்ருதநிதி$_4$:
ஸௌம்யோபயந்தாமுநி:
தச்சி$_2$ஷ்யாக்$_3$ரஸரோऽபரோ விஜயதே
ராமாநுஜாக்$_2$யோமுநி: ॥

முற்காலத்தில் ஶ்ரிய: பதியானவன் தானே ஆசார்யனாகவும், ஶிஷ்யனாகவும் இரண்டு திருமேனிகளை எடுத்துக்கொண்டான். அதில் ஶிஷ்யன் நரன். மற்றொருவர் ஆசார்யனான நாராயணன். இப்பொழுது அவர்களுள் ஒருவர் கருணைக்கடலான மணவாளமாமுநிகளாகவும் மற்றொருவர் அவருடைய ஶிஷ்யர்களில் தலைவரான வாநமாமலை இராமாநுஜ ஜீயர் ஸ்வாமியாகவும் அவதரித்து விளங்குகிறார்கள்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே *ஶ*ரணம்.

ஜீயர் திருவடிகளே *ஶ*ரணம்.

***ஶு*பமஸ்து.**



AN APPEAL

The following institutions are tirelessly engaged in various kainkaryams for our sampradayam. Please contact them if you are interested in participating in their kainkaryams.

SABHA/INSTITUTION NAME	PHONE	WEB SITE / EMAIL
Karimaran Kalai Kapagam (Pavithrothsavam/Brahmostsavams, Publishing 4000 divya prabhandham books, sandhai/sevakala murai CDs, Spiritual Diary, etc)	044 2844 0009	www.kaarimaaran.com kaarimaaran@gmail.com
Srimaan Trust (Gurukulam, education, Spiritual diary, Thadhiyaaraadhanam, Sri Ramayanam contest for school children, Helping needy Srivaishnavas, etc)	0431 243 1109	www.srimaantrust.com
Kinchitkaram Trust (Gurukulam, Propagation of Sampradayam through CDs, books, Yatras, etc)	044 2499 2728	www.kinchitkaramtrust.org admin@kinchitkaramtrust.org
Sri Varamangai Nachiyar Baktha Sabha (Vanamamalai Mutt kainkaryams, Thadhiyaraadhanam, Spiritual Diary, etc)	044 2844 3208	www.vanamamalai.com
Vedics (USA, India, and many other countries) (Temple renovations, Supporting temple utsavams, Archakas, kainkaryaparas, Publishing books, etc)	044 2844 1882	http://www.vedics.net vedicsfoundation@gmail.com
Sri Koorathaazhvan charitable trust (Alwaan 1000th anniversary activities, Building corpus for kooram temple maintenance, utsavams, etc)	044 2844 7520 98406 74816	http://www.kuresan.com ramanannr@yahoo.com
Sri Thennacharya Sri Vaishnava Sripadham Thangigal Sabha, Thiruvallikkeni, Chennai 5. (Sri Parthasarathy Swamy Temple Sripadham Thanguthal, Vahanam renovations, Eka Dina 4000 Divya Prabhandam Parayanam, etc)	044 2844 1317 94440 51317	